**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 20 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 17 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்கவேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) உள்ளூராட்சி அலுவலர்களுடைய ஓய்வூதிங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக 2015 ஆம் ஆண்டு இறுதிவரையான காலப்பகுதிக்கு ரூபா 4,894,174 செலுத்த வேண்டியிருந்தும், செலுத்தப்பட வேண்டிய தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் திரண்டநிதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூராட்சி அலுவலர்களுடைய ஓய்வூதிங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக 2016 ம் ஆண்டு தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 31,498 வருமான செலவுக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் வருமானம் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)செலுத்த வேண்டிய ரூபா 49,960 உரிய நபருக்குச் செலுத்தப்படாமலுள்ளது.

(ஆ) அதிஸ்டலாபச் சீட்டிழுப்பிற்கான வைப்புத்தொகை ரூபா 37,176 இன்றுவரை செலுத்தப்படாதுள்ளது.

**1.3.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

சபையினால் அளவை பதிவேடு, ஆதனங்கள் விற்பனைப் பதிவேடு, மின் தொடர்பு பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | |
| (i) நிதிப்பிரமாணம் 381(3) | காசோலைகளிற் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் பிணைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2011 தொடக்கம் 2012 வரையான 02 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 18,000 பெறுமதியான கேள்வி வைப்புக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1646 | குறிப்பிட்ட மாதத்தின் வாகன ஓட்ட அட்டவணை தொடர்ந்து வரும் மாதத்தில் 15 ஆம் திகதிக்கு முன்னராகக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 45,367,037 விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 39,106,488 ஆகவும் விளைந்திருந்தது. இதன்படி மீளாய்வாண்டுக்கான நிதிப்பெறுபேறுகள் ரூபா 6,260,549 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 1,661 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 5,455 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 3,794 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 230,413,646 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின்

தொழிற்படு மூலதனம் ரூபா 194,260,862 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 36,152,784 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.4 வருமான நிர்வாகம்

### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| ஆதனவரிகள் | 1,570 | 1,698 | 5,296 |
| குத்தகை வாடகைகள் | 8,908 | 8,827 | 290 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,737 | 2,543 | 3 |
| ஏனைய வருமானம் | 85,924 | 86,963 | 128,060 |
| **மொத்தம்** | **100,139** | **100,031** | **133,649** |

### 2.4.2 ஆதனவரி

ஆதனவரி மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ரூபா 4,942,997 இன்றுவரை அறவிடப்படாதுள்ளது.

### 2.4.3 குத்தகை மற்றும் வாடகை

ரூபா 275,508 குத்தகை நிலுவை அறவிடப்படாதுள்ளது.

### 2.4.4 ஏனைய வருமானம்

13 மயானங்களுக்கான மயானவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.5 முத்திரைக் கட்டணம்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 98,104,520 முத்திரைக் கட்டணம் அறவிடப்படாதுள்ளது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

சபையில் 136 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 110 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன் பிரகாரம் 27 பதவியினர் பற்றாக்குறையாகவும் 01 பதவியினர் மிகையாகவும் உள்ளனர்.

### 3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 880,625 பெறுமதியான வாராந்தச் சந்தை பயன்படுத்தப்படாமல் உள்ளது.
(ஆ) சபையின் 02 பவுசர்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா 70,238,400 தொகை பெறுமதியான 30 வேலைகளுக்காக வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்தும், வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 05 தொடக்கம் ரூபா 23,800,312 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.